# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண் 8 / 2016**

திருமதி. வா. சரஸ்வதி,
க/பெ.A. வாசுதேவன்,
எண். 30/4, C.N. பட்டரை,
கூட்டு ரோடு,
விண்ணம்பள்ளி (வழி)
காட்பாடி – தாலுக்கா,
வேலூர் மாவட்டம் – 632516. ..... மேல் முறையீட்டாளர்
(திரு.A. வாசுதேவன்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
வேலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காந்தி தெரு,
வேலூர் – 632 006. ...........எதிர் மனுதாரர்
(திருமதி. சாரதாம்பாள், செயற்பொறியாளர்/காட்பாடி)

**கேட்புரை நாள் – 20.5.2016**

**ஆணை நாள் – 14.7.2016**

திருமதி வா. சரஸ்வதி க/பெ. A. வாசுதேவன், விண்ணம்பள்ளி அவர்களின் 21.01.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.8/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது கேட்புரை 20.5.2016 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பு நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்

மற்றும் இருதரப்பினராலும் கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளரின் மனுவை ஏற்றுக்கொண்டு, மின் வாரிய சட்டதிட்டங்களின்படி அவருடைய வீட்டிற்கு அருகில் செல்லும் மின்பாதையை மாற்று இடத்தில் பொருத்திதர வேண்டும் என்று கோரியுள்ளார்.

**2. வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண். 247 ஐ பயன்படுத்தி வருகின்றார்.

2.2 அவரது வீட்டின் காலிமனையின் மேல் செல்லும் தாழ்வழுத்த மின்பாதையை இட மாற்றம் செய்ய வேண்டும் அல்லது அகற்ற வேண்டும் என்று உதவி செயற்பொறியாளர் கார்ணாம்பட்டு அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

2.3 மாற்றுப்பாதையில் மின்பாதை அமைக்க திரு.வெங்கடேசன், த/பெ.முனுசாமி செட்டியார் என்பவர் ஆட்சேபனை செய்வதால், வேறு மாற்று பாதையில் மின்பாதை அமைக்க அந்த நிலத்தின் உரிமையாளரிடம் அனுமதி பெற்று தரும்படி மேல்முறையீட்டாளர், கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

2.4 மேற்கண்ட நிலையில், மேல்முறையீட்டாளர், தன்னுடைய 7.12.2015 நாளிட்ட முறையீட்டை வேலூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்பித்துள்ளார்.

2.5 மன்றம் தன்னுடைய 12.01.2016 நாளிட்ட ஆணையில் மேல்முறையீட்டாளர் அவருடைய இடத்தில் மின்கம்பம் நடுவதற்கு இடம் அளித்து, அது குறித்த வரைபடத்தையும் அளிக்க வேண்டும் என்றும், உதவி செயற்பொறியாளர்/கார்ணாம்பட்டு அந்த இடத்தை ஆய்வு செய்து வாரிய விதிமுறைகளின்படி தாழ்வழுத்த மின்பாதையை மாற்றம் செய்து தரும்படி உத்தரவு இட்டுள்ளது.

2.6 மேற்கண்ட மன்றத்தின் ஆணையில் அதிருப்தியுள்ள மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

**3.0** <u>**மன்றத்தின் தீர்வு :**</u>

மன்றம் தன்னுடைய தீர்வை **30.12.2015** நாளிட்ட தீர்வை **12.1.2016** நாளிட்ட கடிதத்தின் மூலம் முறையீட்டாளருக்கு தெரிவித்துள்ளது. அந்த தீர்வின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>விசாரணையின் முடிவில் கீழ்கண்ட உத்திரவு வழங்கப்படுகிறது.</u>*

*இம்மன்றம் இரு தரப்பினரையும் விசாரணை செய்ததில், மனுதாரர் அவருடைய இடத்தில் மின்கம்பம் நடுவதற்கு இடம் அளித்து இது குறித்த வரைபடத்தினை உதவி செயற்பொறியாளர்/இ&ப கார்ணாம்பட்டு அவர்களிடம் அளிக்க அறிவுறுத்தப்படுகிறது. மேலும், உதவி செயற்பொறியாளர் கார்ணாம்பட்டு அவர்கள் இந்த இடத்தை ஆய்வு செய்து வாரிய விதிமுறைகளின்படி குறைந்தழுத்த மின்பாதையை மாற்றம் செய்து தருமாறு உத்தரவிடப்படுகிறது."*

**4.0** <u>**மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:**</u>

**4.1** மனுதாரர் அவருடைய இடத்தில் மின் கம்பம் நடுவதற்கு இடம் அளித்து இது குறித்த வரைபடத்தினை உதவி செயற்பொறியாளர் கார்ணாம்பட்டு அவர்களிடம் அளிக்க அறிவுறுத்தப்பட்டது.

**4.2** அவரது மின்பாதையை மாற்றம் செய்ய ஆட்சேபனை தெரிவிக்கும் வெங்கடேசன் த/பெ. முனுசாமி என்பாரின் கோழி பண்ணைக்கும் விவசாய நிலத்திற்கும் செல்லும் மின்பாதையை மாற்றம் செய்ய கோரி விண்ணப்பம் அளித்துள்ளார்.

**4.3** ஆட்சேபணை தெரிவிக்கும் வெங்கடேசன் என்பாருக்கு அவரது வீட்டின் பின்புறம் சுமார் **5**(ஐந்து) ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடங்களில் மின்பாதையை அமைப்பதற்கு மின்வாரியம் மறுப்பது உள்நோக்கம் கொண்ட செயலாகும்.

**4.4** அவருக்கு சொந்தமான இடத்தில் கூட மின்பாதையை மாற்றி அமைக்க வாய்ப்பு உள்ளது. இதை சட்ட பூர்வமான வரைப்படம் சமர்ப்பிக்குமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இச்செயல் ஒரு தலை பட்சமானதாகும். அவர் குடியிருக்கும் வீட்டின் பாதுகாப்பை கணக்கில் கொள்ளாமல் எதிர் தரப்பினரின் விவசாய நிலத்தில் மின் பாதை அமைக்க சட்ட பூர்வமான ஆட்சேபனை தெரிவிக்காத நிலையில் வெள்ளை தாளில் அளிக்கப்பட்ட ஆட்சேபனை மனுவிற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

4.5 எதிர் தரப்பு கூறும் ஆட்சேபனை கடிதத்தில் குறிப்பிடும் காரணங்கள் எந்த விதத்திலும் எதிர் தரப்பினருக்கு பாதிப்பு ஏற்படுத்தும் நிலையை உறுதி செய்ய வில்லை.

4.6 மின்வாரியம் எதிர்தரப்பினருக்கு காட்டிய சலுகையும் பரிவையும் அப்படியே மின் நுகர்வோர் குறைதீர்வு மன்றமும் மின் நுகர்வோரின் உரிமைகளை கணக்கில் கொள்ளவில்லை. மின் ஊழியர்கள் கூறும் காரணங்களை மட்டுமே ஏற்றுக்கொள்கிறது என்பதை மேற்படி உத்தரவு உறுதி செய்கிறது. அவரது மேல்முறையீட்டு மனுவினை ஏற்றுக் கொண்டு மின்வாரிய சட்ட திட்டங்களின் படி அவருக்கு உடனடியாக மின் பாதையை மாற்று இடத்தில் பொருத்தி தர உத்தரவிட வேண்டியுள்ளார்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரை</u>:

5.1 மேல்முறையீட்டாளரின் இடத்தில் மின்கம்பம் நடுவதற்கு இடம் அளித்து இது குறித்த வரைபடத்தினை உதவி செயற்பொறியாளர்/இ&ப/கார்ணாம்பட்டு அவர்களிடம் அளிக்க அறிவுறுத்தப்பட்டது. மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் இருதரப்பினரையும் விசாரணையின் முடிவில் அளிக்கப்பட்ட உத்திரவு ஆகும்.

5.2 திரு.மு. வெங்கடேசன், த/பெ. முனுசாமி செட்டியார் என்பவரின் கோழி பண்ணைக்கும் விவசாய நிலத்திற்கும் செல்லும் மின்பாதை ஆனது மேல்முறையீட்டாளருக்கு இடையூராக சென்றுக் கொண்டிருப்பதால் தான் மேல்முறையீட்டாளர் அம்மின்பாதையை மாற்றி அமைக்க விண்ணப்பம் அளித்துள்ளார்.

5.3 மின்பாதையை மாற்றி அமைக்க கோருபவர் மேல்முறையீட்டாளர் என்பதால் அதற்கான வழிவகைகளை அவர்தான் தான் செய்துதர வேண்டுமே, தவிர ஆட்சேபனை செய்து கொண்டிருக்கும் திரு.மு.வெங்கடேசன் அல்ல. இதில் மின்வாரியத்திற்கு உள்நோக்கம் ஏதும் இல்லை.

5.4 ஏற்கனவே அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கும் மின்பாதையை மேல்முறையீட்டாளருக்கு இடையூராக உள்ளதை மாற்ற கோரிய விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ள மின்பாதையை மாற்றி அமைக்க தேவையான வழிவகைகளை மேல்முறையீட்டாளர்தான் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான இடத்தில் மின்பாதையை மாற்றி அமைக்க வாய்ப்பு உள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் அதற்கான உரிமை ஆவணங்களை இதுநாள் வரையிலும் அளிக்காத நிலையிலும் திரு.மு.வெங்கடேசன் அவர்கள் மின்பாதையை மாற்றி அமைப்பதற்கு ஆட்சேபனை

தெரிவித்த நிலையிலும் மின் பாதையை மாற்றி அமைக்க கோரிய விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை மேற் கொள்ள இயலவில்லை.

5.5 ஏற்கனவே அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கும் மின்பாதையை மாற்றி அமைப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்த பிறகு ஆட்சேபனை தெரிவித்த நபரின் இடத்தில் மின் பாதை அமைக்க இயலாது.

5.6 மின்வாரிய சட்டங்கள் அனைவருக்கும் சமம். இதில் யாருக்கும் சலுகையும், பரிவையும் காட்டவில்லை.

**6.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 13.4.2016 அன்று கேட்புரை நடத்தப்படும் என்று இருதரப்பினருக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டது. மேல்முறையீட்டாளரோ அல்லது அவரின் பிரதிநிதியோ 13.4.2016 அன்று நடந்த கேட்புரையில் கலந்து கொள்ளவில்லை. எதிர்மனுதாரர் சார்பில் திருமதி சாரதாம்பாள், செயற்பொறியாளர், காட்பாடி அவர்கள் கலந்து கொண்டார்.

6.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய 15.4.2016 நாளிட்ட மனுவில் தனக்கு உடல் நலம் சரியில்லாததால் 13.4.2016 அன்று நடந்த கேட்புரையில் கலந்து கொள்ளவில்லை என்றும் வேறு நாளில் விசாரணையை மேற் கொள்ள வேண்டும் என்று கோரியிருந்தார். எனவே மேல்முறையீட்டளாருக்கு மேலும் ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்புரை 20.5.2016 அன்று நடத்தப்பட்டது.

6.3 20.5.2016 அன்று நடந்த கேட்புரையில் மேல்முறையீட்டாளரின் சார்பில் அவரது கணவர் A. வாசுதேவன் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.4 எதிர்மனுதாரர் சார்பில் திருமதி. சாரதாம்பாள், செயற்பொறியாளர்/காட்பாடி அவர்கள் கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

**7.0 <u>கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்:</u>**

7.1 மேல்முறையீட்டாளரின் சார்பில் அவரது கணவர் திரு A. வாசுதேவன் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார். அவர் தன்னுடைய மேல்முறையீடு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி தன்னுடைய வீட்டிற்கு அருகில் செல்லும் மின்பாதையை தங்களின் பாதுகாப்பு கருதி மாற்றி தர வேண்டும் என்றும் அதற்கு ஆகும் செலவு தொகையை அவர்கள் செலுத்த சம்மதிப்பதாகவும் வாதிட்டார்.

7.3 மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு அருகில் செல்லும் மின்பாதை ஒரு கோழிபண்ணைக்கு செல்வதாகவும், அந்த கோழிப்பண்ணையின் உரிமையாளருக்கு உரிமை உள்ள நிலத்தின் வழியாக மின்பாதை அமைத்து அவரின் வீட்டின் மேல் செல்லும் மின்பாதையை மாற்றி அமைக்கலாம் என்றும் வாதிட்டார்.

7.4 மேலும் பெருமாள் கவுண்டனூர் மின்மாற்றிலிருந்து மேற்கண்ட கோழிப்பண்ணைக்கு மின்சாரம் வழங்க முடியும் என்றும் அவ்வாறு மின்சாரம் வழங்கும் பட்சத்தில் அவரின் வீட்டிற்கு அருகில் இருக்கும் மின்பாதை யை அகற்ற முடியும் என்றும் வாதுகை புரிந்தார்.

7.5 மேலும் தற்பொழுது கோழிப்பண்ணைக்கு அவர் வீட்டின் அருகே செல்லும் மின்பாதையை தற்பொழுது உள்ள மின்கம்பத்திற்கு பதில் அதற்கு முன்பாக உள்ள மின்கம்பத்திலிருந்து அமைத்தாலும் தன்னுடைய வீட்டின் அருகிலுள்ள மின்பாதையை மாற்றி அமைக்க முடியும் என்று வாதிட்டுள்ளார்.

8.0 <u>எதிர்மனுதாரர், கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

8.1 எதிர்மனுதாரர் சார்பில் S.சாரதாம்பாள், செயற்பொறியாளர், காட்பாடி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துத்துரைத்தார். செயற்பொறியாளர் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார். செயற்பொறியாளர்/காட்பாடி அவர்கள் மேல்முறையீட்டாளரின் வீட்டின் அருகில் செல்லும் மின்பாதையை மாற்றி அமைக்க திரு. வெங்கடேசன், த/பெ முனுசாமி செட்டியார் அவர்கள் அவருடைய நிலத்தின் வழியாக மின்பாதையை மாற்றி அமைக்க ஆட்சேபனை செய்கின்றார் என்று வாதிட்டுள்ளார்.

8.2 மேலும், மேல்முறையீட்டாளர் வாதிடும் பெருமாள் கவுண்டனூர் மின்மாற்றி–I லிருந்து மின்சாரம் வழங்கினால் திரு. வெங்கடேசன் அவர்களின் மின் இணைப்பிற்கு முழுநேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்படாது என்றும் குறிப்பிட்ட நேரங்களில் தான் மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்பதால் அவரின் கோழிப்பண்ணைக்கு மேற்கண்ட

மின்மாற்றியிலிருந்து மின்சாரம் வழங்குவது அவருக்கு ஏற்புடையது அல்ல என்றும் வாதிட்டுள்ளார்.

8.3 மேலும், மேல்முறையீட்டாளரின் வீட்டின் மேல் செல்லும் மின்பாதையை மாற்றியமைக்க மாற்று பாதைக்கு உரிய அனுமதியும் அதற்கு ஆகும் செலவு தொகையை செலுத்தினால், வாரியம் மின்பாதையை மாற்றி அமைக்க தயாராக உள்ளது என்றும் வாதிட்டுள்ளார்.

**9.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>**

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக உள்ளன.

(i) ஒரு மின்பாதையை மாற்றி அமைப்பது பற்றி விதிகளில் கூறப்பட்டுள்ளது என்ன ?

(ii)மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதா ?

**10 <u>வழக்கெழுவினா ஒன்றிற்கான தீர்வு:</u>**

10.1 ஒரு மின்பாதையை மாற்றி அமைப்பதை பற்றி தெரிந்துகொள்ள நாம், தமிழ்நாடு மினச்ார வழங்கல் விதித்தொகுப்பின் விதி5 (6)ஐ ஆராய்ந்து பார்க்கவேண்டும். மேற்கண்ட விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"5. Miscellaneous charges :***

*xxx xxx xxx*
*xxx xxx xxx*
*xxx xxx xxx*

*(6) Service / line, structure and equipments shifting charge*

*(1) The cost of shifting service / line, Structure and equipments shall be borne by the consumer. The consumer shall pay the estimated cost of shifting in advance in full. The copy of the estimate shall be given to the consumer. The shift ing work will be taken up only after the payment is made. The estimate will cover the following:*

*(i) Materials dismantled in the old site and reusable shall be used in the new site as far as possible.*

*(ii) 10% of the present value of the dismantled and reusable materials towards charge for dismantling and charges for loading, unloading, transport to the new site/store.*

*(iii) Cost of the new materials required for the shifting work.*

*(iv) Add 5% of the cost of new materials towards loading, unloading and transport to new site.*

*(v) Add 10% of the present value of all the material to be erected in the new site towards erection charges.*

*(vi) 5% of the present value of retrievable scrap materials towards transport charges,*

*(vii) Due credit shall be given to the consumer /applicant as below but however limited to the total estimated cost of new work:*

*(a) Book value /written down value subject to a minimum of 20% of the cost of retrievable and reusable materials but not used in the new site.*
*(b) Scrap value on the retrievable but not reusable materials at not less than 10% of its original value.*
*(viii) After completion of the work a revised estimate shall be prepared with a copy to the consumer based on the actual cost of materials, loading, unloading, transport and erection charges. If the original estimate cost is more than the revised estimate, the balance shall be refunded to the applicant/consumer within 3 months. If the original estimate cost is less than the revised estimate, the difference shall be collected from the applicant/consumer.*
*(2) Temporary dismantling and re-erection or shifting of a service connection within the same premises necessitated due to remodeling of premises will be carried out on payment of the required charges for the same.*
*(3) Shifting of an existing service connection involving change in door number or sub-door number or survey field number, shall be considered as a new service connection only.*
*No shifting of an existing service connection is permissible unless all arrears in the service connection are paid, if so demanded by the Licensee ."*

**10.2** மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு மின்பாதையை அல்லது structure ஐ மாற்றி அமைக்க ஏற்படும் செலவு தொகையை அவ்வாறு மாற்ற வேண்டும் என்று கோரும் மின்நுகர்வோரே ஏற்க வேண்டும். மேலும், மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத்திற்கான தொகையை நுகர்வோர், உரிமம்தாரர் வேலையை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே செலுத்திவிட வேண்டும் என்றும் அறிய முடிகிறது. மேலும், இடமாற்றத்திற்கான மதிப்பீடு மேலே தெரிவிக்கப்பட்டுள்ள உறுப்பினங்கள் அடங்கியுள்ளதாகவும் இருக்க வேண்டும்.

**10.3** மேலும், வேலைகள் முடிந்து மின்பாதை மாற்றி அமைக்கப்பட்ட பின்பு பயன்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பு, கட்டுமான செலவு, மற்றும் பொருட்களை வேலை நடக்கும் இடத்திற்கு கொண்டு செல்லவும், தேவையற்ற பொருட்களை பண்டகசாலையில் சேர்க்கும் செலவு அகியவற்றை உள்ளடக்கிய மறுமதிப்பீடு செய்யப்பட்டு அந்த மதிப்பீட்டின் தொகை முதல் மதிப்பீட்டை விட அதிகமாக இருந்தால் வேறுபாட்டுத் தொகை விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்படும் என்றும் மறு மதிப்பீடு தொகை முதல் மதிப்பீட்டை விட குறைவாக இருந்தால் மீதித்தொகை, விண்ணப்பதாரருக்கு 3 மாத காலத்திற்குள் திரும்ப அளிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது.

**10.4** மேலும், தற்பொழுது உபயோகத்திலுள்ள ஒரு மின்பாதையை மாற்றி அமைக்க வேண்டும் எனில் கீழ்கண்டவைகளையும் ஆராய வேண்டும்.

(i) மேற்கண்ட மின்பாதையை மாற்றியமைக்க தொழில்நுட்ப கூறின்படி சாத்தியம் (Technical feasibility) உள்ளதா ?

(ii) மின்பாதையை மாற்றி அமைக்க வழியுரிமை (Right of way) உள்ளதா ?

10.5 மேற்கண்ட பத்திகளில் உள்ள விவரங்களின்படி ஒரு மின்பாதையை மாற்றி அமைக்க வேண்டும் எனில் அவ்வாறு மாற்றியமைக்க தொழில்நுட்ப சாத்திய கூறு இருக்க வேண்டும், மேலும், மாற்றுபாதையை அமைக்க மாற்றுப்பாதையில் வழியுரிமை (Right of way) வேண்டும், மேலும், அவ்வாறு மாற்றி அமைக்க ஆகும் செலவுத்தொகையை மின்பாதையை மாற்றி அமைக்க கோரும் நுகர்வோரே ஏற்க வேண்டும் என்றும் தெரிகிறது.

11. <u>**வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு**</u>

11.1 வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வின்படி ஒரு மின்பாதையை மாற்றி அமைக்க வேண்டுமெனில் கீழ்கண்டவைகளை கடைபிடிக்க வேண்டும்.

(i) மேற்கண்ட மின்பாதையை மாற்றியமைக்க தொழில்நுட்ப கூறின்படி (Technical feasibility) சாத்தியக்கூறு இருக்க வேண்டும்.

(ii) மாற்றுப்பாதை அமைக்க மாற்றுப்பாதையில் வழியுரிமை (Right of way) வேண்டும்.

(iii) மாற்றி அமைக்க ஆகும் செலவை, மாற்றம் கோரும் நுகர்வோர் ஏற்க வேண்டும்.

11.2 இந்த முறையீட்டாளர், தன்னுடைய வீட்டின் மேல் செல்லும் மின்பாதையை மாற்றியமைக்க ஏற்படும் செலவுத்தொகையை செலுத்த சம்மதம் என்று தெரிவித்துள்ளார். எனவே, செலவுத்தொகையை யார் செலுத்துவது என்பதில் கருத்துவேற்றுமை இல்லை.

11.3 ஆனால், மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ள பாதையில் மின்பாதை அமைக்க திரு. வெங்கடேசன் என்பவர் ஆட்சேபனை செய்கிறார் என்று எதிர்மனுதாரர் வாதிட்டுள்ளார்.

11.4 மேலும், மாற்று பாதையில் மின்பாதை அமைக்க ஏற்படும் ஆட்சேபனையை மாற்றம் கோரும் மேல்முறையீட்டாளர் நீக்கி தரும்பட்சத்தில் அல்லது ஆட்சேபனையற்ற மாற்றுபாதையை ஏற்படுத்திதரும் பட்சத்திலும் மின்பாதையை மாற்றித்தர தாங்கள் தயார் என்று எதிர்மனுதாரர் வாதிட்டுள்ளதால் மின்பாதை அமைக்க தொழில்நுட்ப கூறின்படி தடங்கல் எதுவும் இல்லை. ஆனால், மாற்றுப்பாதையில் மின்பாதை அமைக்க ஆட்சேபனை உள்ளது என்று தெரிகிறது.

**11.5** எதிர்மனுதாரர், மேல்முறையீட்டாளரின் வீட்டின் மேல் செல்லும் மின்பாதையை மாற்றியமைக்க ஆட்சேபனையற்ற மாற்றுப்பாதையை தெரிவித்தால் அந்த மாற்றுப்பாதையில் மின்பாதை அமைக்க மதிப்பீடு தயார் செய்து அந்த மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்தும் பட்சத்தில் மின்பாதையை மாற்ற அவர்கள் தயார் என்று தெரிவித்துள்ளதாலும், மேல்முறையீட்டாளர் தான் மேற்கண்ட மின்பாதையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கோருவதால், மேல்முறையீட்டாளர் ஆட்சேபனையற்ற ஒரு மின்பாதையை தெரிவித்து அதற்கான மதிப்பீட்டுத்தொகையையும் செலுத்தி மின்பாதையை மாற்றிக் கொள்ளலாம் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.6** மேலும், கோழிப்பண்ணைக்கு மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு அருகில் செல்லும் மின்பாதையை தற்பொழுது உள்ள மின் கம்பத்திற்கு பதில் அதற்கு முன்பாக உள்ள மின் கம்பத்திலிருந்து அமைக்க வழியுள்ளது என்ற மேல்முறையீட்டாளரின் வாதத்தையும் கருத்தில் கொண்டு ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

**12. <u>முடிவுரை</u>**

**12.1** வழக்கெழுவினா ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளர் தான் மின்பாதையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கோருவதால் மேல்முறையீட்டாளர் ஆட்சேபனையற்ற ஒரு மின்பாதையை தெரிவித்து அதற்கான மதிப்பீட்டு தொகையையும் செலுத்தி மின்பாதையை மாற்றிக் கொள்ளலாம் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12.2** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண். 8/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திருமதி. வா. சரஸ்வதி,
க/பெ.A. வாசுதேவன்,
எண். 30/4, C.N. பட்டரை,
கூட்டு ரோடு,
விண்ணம்பள்ளி (வழி)
காட்பாடி – தாலுக்கா, வேலூர் மாவட்டம் – 632516.

2) மேற்பார்வை பொறியாளர்,
வேலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காந்தி தெரு,
வேலூர் – 632 006.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
வேலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காந்தி தெரு, வேலூர் – 632 006.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.